**ஜூலை – 28**

# TNPSC துளிகள்

- 36-வது சரக்கு மற்றும் சேவைகள் வரி (Goods and Services Tax) ஆணையக் கூட்டத்தின் போது, அனைத்து மின்சார வாகனங்களின் மீதான GST வரி விகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றுச் சாதனங்கள் மற்றும் மின்னேற்று நிலையங்கள் மீதான GST வரி விகிதம் 18 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப் பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- மும்பை மற்றும் கோல்ஹாப்பூர் ஆகிய நகரங்களுக்கு இடையே இயங்கும் மகாலட்சுமி விரைவு இரயிலானது உல்ஹாஸ் ஆற்றில் ஏற்பட்ட மிக அதிகளவிலான வெள்ளத்தின் காரணமாக நடுவழியில் சிக்கிக் கொண்டது. அதில் 100ற்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் மேற்கொண்டனர். பின்னர் இந்தப் பயணிகள் அனைவரும் மீட்கப்பட்டனர்.
    - உல்ஹாஸ் நதியானது அரபிக் கடலில் கலக்கின்ற ஒரு மேற்கு நோக்கிப் பாயும் நதியாகும்.

# தேசியச் செய்திகள்

## வந்தே மாதரம் வழக்கு

- “ஜன கன மண”விற்கு இணையாக “வந்தே மாதரத்தை” அறிவிக்க மத்திய அரசிற்கு வழிகாட்டுதல் வழங்கக் கோரிய ஒரு மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- வந்தே மாதரம் என்பது 1870 ஆம் ஆண்டில் பக்கிம் சந்திர சட்டர்ஜியால் எழுதப்பட்ட ஒரு வங்க மொழிக் கவிதையாகும். இவர் இதை 1882 ஆம் ஆண்டில் தன்னுடைய நாவலான “ஆனந்தமடத்தில்” இணைத்துள்ளார்.
- இந்தக் கவிதையானது இரவீந்திரநாத் தாகூரால் பாடலாக மாற்றப்பட்டது.
- இது இந்திய தேசியக் காங்கிரஸின் 1896 ஆம் ஆண்டின் கல்கத்தா கூட்டத் தொடரின் போது இரவீந்திரநாத் தாகூரால் அரசியல் நோக்கில் பாடப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## ஒமேகா தொகுதி – ஐரோப்பாவில் கால நிலை சார்ந்த அவசர நிலை

- பெல்ஜியம், ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் இரண்டாவது முறையாக தங்களது மிக அதிக வெப்பநிலையைப் பதிவு செய்துள்ளன.
- சமீபத்திய இந்த அனல் காற்றானது “ஒமேகா தொகுதியினால்” ஏற்பட்டிருக்கின்றது.
- மேற்கு ஐரோப்பாவின் வானிலையானது அதிவேகக் காற்றுப் புனலினால் (jet stream) மிகப் பெருமளவில் பாதிக்கப் படுகின்றது.
- ஒமேகா தொகுதி என்பது அதிவேகக் காற்றுப் புனலைத் தடுத்து, திசை மாற்றக்கூடிய

ஒரு உயர் காற்று அழுத்த அமைப்பாகும்.

- இது வட ஆப்பிரிக்கா மற்றும் ஐபீரியத் தீபகற்பம் ஆகியவற்றில் இருந்து ஏராளமான அனல் காற்றை மேலே செல்ல அனுமதிக்கின்றது.
- இது ஒமேகா வடிவத்தில் இருக்கின்றது. எனவே இது "ஒமேகா தொகுதி" என்ற பெயரைப் பெற்றுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## டொலுட்டிகிராவிர் – எச்ஐவி மருந்து

- உலக சுகாதார அமைப்பானது எச்ஐவி மருந்தான டொலுட்டிகிராவிர் (dolutegravir - DTG) என்பதனை அனைத்து மக்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சிகிச்சைக்கு பயன்படுத்தப் பரிந்துரைத்துள்ளது.
- இது கர்ப்பிணிப் பெண்களுக்கும் கருத்தரிக்கும் வயதுடைய பெண்களுக்கும் பரிந்துரைக்கப் படுகின்றது.
- DTG என்பது டிவிகே என்ற வியாபாரக் குறியீட்டுப் பெயரின் கீழ் விற்கப்படுகின்றது.
- இது எச்ஐவி / எய்ட்ஸ் சிகிச்சைக்குப் பிற மருந்துகளுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படும் நச்சுயிரிக்கு எதிரான ஒரு மருந்தாகும்.
- DTG ஆனது மாற்று மருந்துகளை விட மிகவும் திறனுள்ள, மிக எளிதில் எடுத்துக் கொள்ளக்கூடிய மற்றும் குறைந்த அளவிலான பக்க விளைவுகளைக் கொண்டுள்ளது.
- இந்த மருந்தானது மருந்து எதிர்ப்பை மேம்படுத்துவதற்கு அதிக மரபணுத் தொகுதியைக் கொண்டுள்ளது.

## புற்றுநோயைக் கண்டறியும் அங்கி

- மார்பகப் புற்றுநோயைக் கண்டறியக் கூடிய ஒரு வெப்பக் கண்காணிப்பு அங்கி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

- இது மகாராஷ்டிராவில் உள்ள மாவட்ட மகளிர் மருத்துவமனையிடம் வழங்கப்பட்டுள்ளது.
- இது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தினால் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த அங்கியானது நோயறிதலுக்கு உட்படுத்தப்படும் நபரினால் ஒரு சில நிமிடங்களுக்கு அணியப்படுகின்றது. இதனால் வெப்பக் கண்காணிப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வளர்ந்து வரும் புற்றுநோயைக் கண்டறியும்.
- இது “இந்தியாவில் தயாரிப்போம்” என்ற திட்டத்தின் கீழ் முரட்டா என்ற ஜப்பானிய உற்பத்தி நிறுவனத்தினால் இந்தியாவில் தயாரிக்கப்பட விருக்கின்றது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் அழிந்து போன இனங்கள்

- கடந்த சில நூற்றாண்டுகளில் இந்தியாவில் 4 வகையான விலங்கு இனங்களும் 18 வகையான தாவர விலங்கினங்களும் அழிந்து போனதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருக்கின்றது.

***விலங்கினங்கள்***

- பாலூட்டி இனங்களில் பின்வருபவை இந்தியாவில் அழிந்துபோன இனங்களாகக் கருதப்படுகின்றன.
  - சிறுத்தை - ஆசியோஸநைக்ஸ் ஜுபாடஸ்
  - சுமத்ரா காண்டாமிருகம் – டைசிரோர்ஹினஸ் சுமத்ரென்சிசி
  - இளஞ்சிவப்பு நிற வாத்து – ரொடோனெஸ்ஸா கேரியோபைலாசெய்
  - இமாலயக் காடை – ஒப்ரைசியா சூப்பர்சிலிலியோஸ்
- உலகில் 6.49 சதவிகித அனைத்து வகையான விலங்கினங்களையும் இந்திய கொண்டுள்ளது.


***தாவரங்கள்***

- 14 பூக்கும் மற்றும் 4 பூக்காத தாவரங்கள் என ஒட்டுமொத்தமாக 18 வகையான தாவரங்கள் இந்தியாவில் மறைந்து போயுள்ளன.

- அவற்றில் குறிப்பிடத்தக்கவை
  - மணிப்பூரில் உள்ள பன்னம் என்ற ஒரு வகை – லாஸ்ட்டிரியோப்சிஸ் வாட்டி
  - ஒப்ஹியோரிசா வகுப்பைச் சேர்ந்த 3 இனங்கள் (ஒப்ஹியோரிசா புருனோனிஸ், ஒப்ஹியோரிசா கவ்டேட் மற்றும் ஒப்ஹியோரிசா ரேடிகன்)
- உலகில் உள்ள அனைத்து வகையான தாவர இனங்களில் 11.5 சதவிகிதத்தை இந்தியா கொண்டுள்ளது.

## ஆழ் கடல் ஆய்வு

- ஆழ் கடல் ஆய்வுத் திட்டமானது (Deep Ocean Mission - DOM) மத்திய அரசிடமிருந்து திட்ட அளவிலான ஒப்புதலைப் பெற்றுள்ளது.
- இது மத்திய புவி அறிவியல் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப் படவிருக்கின்றது.




- இந்த ஆய்வானது 35 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரோவினால் தொடங்கப்பட்ட விண்வெளி ஆய்வைப் போன்று ஆழ்கடலில் ஆய்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் உலோகங்கள் மற்றும் கனிமங்கள் ஆகியவற்றைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்.
  - கடல் ஒத ஆற்றலுடன் செயல்படக்கூடிய கடலில் உள்ள ஒரு உப்பு நீக்க (கடல் நீரைக் குடிநீராக) ஆலை.
  - 3 நபர்களுடன் 6000 மீட்டர்கள் ஆழம் வரை செல்லக்கூடிய ஒரு நீர்மூழ்கு வாகனத்தை மேம்படுத்துதல்.

# மாநிலச் செய்திகள்

## நாகாலாந்தின் பானோவ் ஜெ ஜமீர் ஆணையம்

- நாகாலாந்தின் பூர்வகுடி மக்களின் பதிவேட்டை (Register of Indigenous Inhabitants of Nagaland - RIIN) உருவாக்குவதற்கான முறைகளை வடிவமைப்பதற்கு ஒரு ஆணையத்தை நாகாலாந்து அரசு அமைத்துள்ளது.
- இக்குழுவானது ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளரான பானோவ் ஜெ ஜமீர் என்பவரின் தலைமையில் செயல்படவிருக்கின்றது.
- இது தகுதி நிலை, அடையாளச் சான்றிதழ்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் RIINஐ செயல்படுத்துதல் தொடர்பான பிற பிரச்சனைகள் ஆகியவை குறித்துப் பரிந்துரைக்கும்.

### *இதுபற்றி*

- RIIN என்பது நாகாலாந்து மாநிலத்தில் உள்ள அனைத்துப் பூர்வகுடி மக்களின் பதிவேடாகும். இது தகுதியற்ற நபர்களை நீக்குகின்றது.
- நாகாலாந்து ஒரு முழு மாநிலமாக உருவாகிய தினமான 1963 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதிக்கு முன்னர் நாகாலாந்தில் குடியேறிய மக்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப் படவிருக்கின்றனர்.

# விளையாட்டுச் செய்திகள்

## கிரண் ரிஜ்ஜு குழு

- 2020 மற்றும் 2024 ஒலிம்பிக் போட்டிகளுக்கான தயார் நிலையை ஒருங்கிணைத்து மற்றும் உத்திகளை வகுத்துச் செயல்படுத்துவதற்காக 10 உறுப்பினர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- இது விளையாட்டுத் துறை அமைச்சரான கிரண் ரிஜ்ஜுவின் தலைமையில் செயல்படும்.
- ஒலிம்பிக் வீரர்களான லியாண்டர் பயஸ் மற்றும் துப்பாக்கி சுடுதல் வீரரான கஹன் நரங் ஆகியோரும் இக்குழுவில் உள்ளனர்.
- இக்குழுவானது இந்தியத் தடகள வீரர்களின் செயல்திறன் ஒலிம்பிக் போட்டி மற்றும் பிற பன்முக விளையாட்டுகளில் மிகச் சிறப்பாக அமைவதை உறுதிப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச சதுப்பு நிலக் காடுகள் பாதுகாப்பு தினம் – ஜூலை 26

- ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 26 அன்று ஐக்கிய நாடுகளின் சர்வதேச சதுப்பு நிலக் காடுகள் பாதுகாப்பு தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது 2015 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் பொதுக் கருத்தரங்கினால் முதன்முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- இத்தினமானது சதுப்பு நிலக் காடுகளின் சூழலமைப்பினை “ஒரு தனித்துவ, சிறப்பு மிக்க மற்றும் பாதிக்கப்படக்கூடிய சூழலமைப்பாக” இருப்பதின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புயல், சுனாமி, கடல் மட்ட உயர்வு மற்றும் கடல் அரிப்பு ஆகியவற்றிற்கு எதிரான ஒரு இயற்கைக் கடலோரப் பாதுகாப்பு அமைப்பாக சதுப்பு நிலக் காடுகள் செயல்படுகின்றன.
- இவற்றின் மண் மிகவும் பயனுள்ள கரிமக் கருவூலங்களாக (கார்பனைப் பிடித்து வைத்தல்) இருக்கின்றன.

## மத்திய ஆயுதக் காவல் படை தினம் – ஜூலை 27

- இந்தியாவில் மிகப்பெரிய துணை இராணுவப் படையான மத்திய ஆயுதக் காவல் படையின் (CRPF - Central Reserve Police Force) 81-வது எழுச்சி தினம் 2019 ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று அனுசரிக்கப்பட்டது.
- 1939 ஆம் ஆண்டு இத்தினத்தில் CRPF ஆனது தலைமைப் பிரதிநிதிகளின் காவற் படையாக உருவாகியது.
- இது 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதி CRPF சட்டம் இயற்றப்பட்டதற்குப் பின்பு தற்பொழுதைய பெயரான CRPF என்று அதற்கு பெயர் மாற்றப்பட்டது.
- இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இது பின்வருவனவற்றை எதிர்கொள்வதில் முதன்மைப் படையாகச் செயல்படுகின்றது.
    - ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதம்
    - நக்சலைட்டுகளை எதிர்த்துப் போராடுதல்
    - வடகிழக்கு இந்தியாவில் நிகழும் கிளர்ச்சி

## உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் – ஜூலை 28

- ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 28 அன்று உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் (World Hepatitis Day - WHD) அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- 63-வது உலக சுகாதாரச் சபையானது ஜூலை 28 ஆம் தேதியை WHD ஆக அறிவித்துள்ளது.
- கல்லீரல் அழற்சி நோய் தினம் என்ற கருத்துருவானது டாக்டர் ப்ளம்பெர்க் என்பவரால் ஒடிசாவின் கட்டாக்கில் உருவாகியது.
- கல்லீரல் அழற்சி B வைரஸைக் கண்டுபிடித்த நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியான டாக்டர் பரூச் ப்ளம்பெர்க் என்பவரின் பிறந்த தினத்தின் நினைவாக ஜூலை 28 என்ற தேதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவர் இந்த வைரஸிற்கான மருந்தையும் பரிசோதனையையும் கண்டுபிடித்தார்.
- இந்தத் தினமானது தொற்றுநோய்க் குழுவான கல்லீரல் அழற்சி நோய் A,B, C, D மற்றும் E ஆகியவை குறித்தும் தொற்றுநோயைத் தடுப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, “கல்லீரல் அழற்சி நோயை ஒழிப்பதில்

முதலீடு செய்” எனபதாகும்.

- 2019 ஆம் ஆண்டின் உலக கல்லீரல் அழற்சி நோய் தினத்தை நடத்தும் நாடு பாகிஸ்தான் ஆகும்.

- - - - - - - - - - - - - - -